30 லட்சம் டன் உணவு தானியங்களை விடுவிக்க மத்திய அரசு முடிவு

First Published : 27 Jul 2010 03:15:13 AM IST

புது தில்லி, ஜூலை 26: விலைவாசி உயர்வைக் கருத்தில் கொண்டு வறுமைக் கோட்டுக்கு மேலே உள்ளவர்களுக்காக பொது விநியோகமுறை மூலம் வழங்குவதற்காக 30 லட்சம் டன் அரிசி மற்றும் கோதுமையை கூடுதலாக விடுவிப்பதற்கு உணவுக்கான மத்திய அமைச்சர்கள் குழு முடிவு செய்துள்ளது.

÷தில்லியில் மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தலைமையில் திங்கள்கிழமை நடைபெற்ற அமைச்சர்கள் குழுக் கூட்டத்தில் இதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

÷ரேஷன் கடைகள் மூலம் வறுமைக் கோட்டுக்கு மேலே உள்ளவர்களுக்கு கோதுமை மற்றும் அரிசி முறையே ரூ.6.10 மற்றும் ரூ.8.30-க்கு வழங்கப்
படுகிறது.

÷இத்திட்டத்தின்கீழ் மாதத்துக்கு 15 கிலோவுக்குக் குறைவாக உணவுப் பொருள்களை பெறுவோருக்கு கூடுதலாக வழங்குவதற்காக கோதுமை மற்றும் அரிசி விடுவிக்கப்படுகிறது. இதன் மூலம் 11.5 கோடி பேர் பலனடைவர்.

÷மேலும் கிடங்குகளில் அளவுக்கு அதிகமாக உணவுப் பொருள்கள் தேங்குவதைத் தடுக்கவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த கூடுதல் உணவுப் பொருள்கள் அடுத்த 6 மாதங்களுக்கு வழங்கப்பட உள்ளது.

இயந்திர நடவு குறித்த செயல்விளக்கம்

First Published : 26 Jul 2010 11:37:46 AM IST

Last Updated : 26 Jul 2010 12:33:19 PM IST

நீடாமங்கலம், ஜூலை 25: நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் நெல்லில் இயந்திர நடவு பற்றிய செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

இந்தப் பயிற்சியில் கலந்துகொண்டு நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் தி. செங்குட்டுவன் பேசும்போது, நெல் சாகுபடியில் ஆள் பற்றாக்குறையால் ஏற்படும் பாதிப்பை நிவர்த்தி செய்வதற்கு ஒரே தீர்வு இயந்திர நடவு முறைதான் என்றார் அவர்.

உழவியல் பேராசிரியர் முனைவர் கு. சுதாகர், இயந்திர நடவுக்கு நாற்றுக்களை தயார் செய்வது பற்றியும், இயந்திர நடவில் களையடுக்கும் கருவி கொண்டு களையெடுப்பது பற்றியும் எடுத்துக் கூறினார்.

25-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பயிற்சி பெற்றனர்.

**விவசாயிகளுக்கு மானியத்தில் வேளாண் கருவிகள்: இணை இயக்குநர் ஆய்வு**

First Published : 26 Jul 2010 11:45:16 AM IST

Last Updated : 26 Jul 2010 12:32:58 PM IST

பெரம்பலூர், ஜூலை 25: பெரம்பலூர் மாவட்ட வேளாண்மை துறை மூலம், மானியத்தில் வழங்கப்பட்ட தெளிப்பு நீர் மற்றும் சொட்டு நீர் கருவிகளை வேளாண்மை இணை இயக்குநர் எஸ். சிவக்குமார் சனிக்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பெரம்பலூர் வட்டாரத்தில் வேளாண்மைத் துறை மூலம் தேசிய வேளாண்மை மேம்பாட்டு திட்டத்தின் கீழ், தெளிப்பு நீர் பாசனக் கருவிகள் 50 சத மானியத்தில், கடலை, பயறு வகைகளுக்கு ஹெக்டேருக்கு ரூ. 15 ஆயிரம் மானியத்தில் கருவிகள் வழங்கப்பட்டன.

மேலும், துல்லிய பண்ணை திட்டத்தில் கரும்பு பயிரில் ஹெக்டேருக்கு ரூ. 40 ஆயிரம் மானியத்தில் 20 ஹெக்டேர் பரப்பளவில் சொட்டு நீர் பாசனக் கருவிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

பெரம்பலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் எஸ். சிவக்குமார் தலைமையிலான அலுவலர்கள், பாளையம், லாடபுரம், குரும்பலூர் பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் மானியத்தில் கருவிகளை பெற்றுள்ள விவசாயிகளின் வயல்களுக்கு சென்று இந்தக் கருவிகளை ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வின்போது வேளாண்மை அலுவலர் கி. பச்சியம்மாள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**தென்னையில் வேர் வாடல் நோயை கட்டுப்படுத்தும் முறைகள்**

First Published : 26 Jul 2010 10:40:48 AM IST

Last Updated : 26 Jul 2010 12:30:56 PM IST

குலசேகரம், ஜூலை 25: கன்னியாகுமரி மாவட்டத்தில், தென்னை மரங்களில் ஏற்பட்டு வரும் வேர் வாடல் நோயைக் கட்டுப்படுத்துவது குறித்து பேச்சிப்பாறை வேளாண் அறிவியல் நிலையம் ஆலோசனை தெரிவித்துள்ளது.

இது குறித்து, இம்மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் க. இறைவன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தமிழ்நாட்டில், பல மாவட்டங்களில் பயிர்களில் நோய் கண்காணிப்பு ஆய்வு செய்யப்பட்டது. தற்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் கேரள எல்லைப் பகுதிகளான கிள்ளியூர், திருவட்டாறு, குருந்தன்கோடு ஆகிய ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் தென்னை மரங்களில் வேர் வாடல் நோய் பரவுவது காணப்படுகிறது.

இந்நோய் பைட்டோபிளாஸ்மா என்னும் நுண்ணுயிரியினால் ஏற்படுகிறது. பாதிக்கப்பட்ட மரங்களில் 30 முதல் 40 சதவிகிதம் வரை வேர்கள் அழுகியும், ஓலை, நுனியிலிருந்து மஞ்சள் நிறமாக மாறி கருகவும் செய்யும். இந்நோயால், தென்னை மரங்கள் பல ஆண்டுகள் உயிர் பிழைத்து நின்று, குறைந்த விளைச்சலைக் கொடுக்கும்.

இந்நோய் தாக்கப்பட்ட மரங்களில் இலை அழுகல் நோய் தாக்குதலும் அதிக அளவில் காணப்படுகிறது.

இதனைக் கட்டுப்படுத்த கார்பென்டசிம் 2 கிராம் 100 மிலி தண்ணீரில் கலந்து வேர் மூலமாக ஓராண்டுக்கு 3 முறை செலுத்த வேண்டும்.

வேர் வாடல் நோய் பரவுவதைத் தடுக்க தகுந்த ஒருங்கிணைந்த நோய் மற்றும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை கடைப்பிடிப்பது அவசியமாகும். ஒரு மரத்திற்கு 50 கிலோ தொழு உரமும் மற்றும் வேம்பம் புண்ணாக்கு 5 கிலோவும் இடவேண்டும்.

மேலும் பரிந்துரைக்கப்பட்ட ரசாயன உரங்களை ஆண்டுக்கு இருமுறை இடவேண்டும். மரம் ஒன்றிற்கு 200 கிராம் சூடோமோனாஸ், புளூரோசன்ஸ் 200 கிராம் வீதம் 50 கிலோ குப்பை மண்ணில் கலந்து இட வேண்டும்.

மண்ணின் வளத்தைப் பெருக்கி, கலப்புப் பயிர் செய்வதன் மூலம் அதிகமாகப் பாதிக்கப்பட்ட மரங்களை அகற்றிவிட்டு, புதிய தரமான கன்றுகளை நடுவதன்மூலம் இந்நோயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியும் என தெரிவித்துள்ளார்.

**தென்காசி வட்டாரத்தில் வாழை சாகுபடிக்கு மானியம்**

First Published : 26 Jul 2010 10:46:34 AM IST

Last Updated : 26 Jul 2010 12:29:55 PM IST

தென்காசி, ஜூலை 25: தென்காசி வட்டாரத்தில் தோட்டக்கலைத் துறை மூலம் தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் கீழ் வாழை சாகுபடிக்கு மானியம் வழங்கப்படுகிறது.

இதுகுறித்து தென்காசி வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் எஸ்.மதியழகன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தென்காசி பகுதியில் தற்போது வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தோட்டக்கலைத் துறை மூலம் தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் கீழ் வாழை சாகுபடிக்கு ஒரு ஹெக்டேருக்கு
ரூ. 16ஆயிரத்து 490-க்கு மானியத்தில் இடுபொருள்களாக தண்ணீரில் கரையும் ரசாயன உரங்கள் வழங்கப்படவுள்ளன.

தற்போது வாழை சாகுபடி செய்யும் விவசாயிகள், இத் திட்டத்தின் மூலம் மானியம் பெற தென்காசி, வேளாண்மை விரிவாக்க மையத்தில் தோட்டக்கலை உதவி இயக்குநர் மற்றும் தோட்டக்கலை உதவி அலுவலர்களை அணுகிப் பயனடையலாம்.

தாங்கள் பயிரிட்டுள்ள வாழைத்தோட்டத்தின் 101 அடங்கல், குடும்ப அட்டை நகல், விவசாயினுடைய பாஸ்போர்ட் அளவு புகைப்படம் இரண்டு, வாழைத்தோட்டம் பயிரிட்டுள்ள விவர புகைப்படம் ஆகியவற்றுடன் தோட்டக்கலைத் துறையினரை அணுகி விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து, விவசாயிகள் முன்பதிவு செய்து கொள்ளலாம் என்றார் அவர்.

**தென்னை நடவுமுறை: கடைப்பிடிக்க வேண்டிய முறைகள்**

First Published : 26 Jul 2010 10:43:11 AM IST

Last Updated : 26 Jul 2010 12:30:30 PM IST

ஆறுமுகனேரி, ஜூலை 25: தென்னை நடவு முறை பற்றி உடன்குடி உதவி வேளாண் இயக்குநர் த.பாரதி விவசாயிகளுக்கு விளக்கி உள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தென்னை நடவு செய்திட ஆடிப் பட்டம் ஏற்ற காலம் ஆகும். தென்னந்தோப்புகளில் தென்னங்கன்றுகளை நடவு செய்திட 20 அடி இடைவெளியில் குழிகள் தோண்ட வேண்டும். குழிகள் 3 அடி நீளம் 3 அடி அகலம் மற்றும் 3 அடி ஆழம் என்ற அளவில் அமைந்திருக்க வேண்டும். இக் குழிகளில் காய்ந்தச் சருகுகளை எரிக்க வேண்டும். பின்னர் குழிகளை ஒரு மாதம் வரை நன்கு ஆறப் போட வேண்டும். நடவுக்கு முன்னர் குழிகளில் ஒரு அடி ஆழம் வரை மேல்மண், தொழுஉரம் மற்றும் செம்மண் ஆகியவை கலந்த கலவையை இட வேண்டும்.

பின்னர் குழியின் மத்திய பகுதியில் தென்னங்கன்றின் நெட்டியின் முகப்பு தெரியும் வகையில் நடவு செய்திட வேண்டும்.

தென்னங்கன்றைச் சுற்றியுள்ள மணலை மிதித்து விட்டு கன்று காற்றில் அசையாதவாறு ஒரு சிறிய கம்புடன் சேர்த்து கட்டி விட வேண்டும்.

தென்னங்கன்றிற்கு நிழல் கொடுக்க அருகே இரு பனைஓலைகளை நட்டிட வேண்டும். நடவு செய்த பின் தினசரி தண்ணீர் விட வேண்டும். விவசாயிகளுக்குத் தேவையான நெட்டை தென்னங்கன்றுகள் மற்றும் நெட்டை குட்டை தென்னங்கன்றுகளுக்கு உடன்குடி வேளாண் விரிவாக்க மையத்தினை தொடர்பு கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**காய்கறி தோட்டம் அமைக்கும் பயிற்சி**

First Published : 26 Jul 2010 11:11:09 AM IST

Last Updated : 26 Jul 2010 12:26:45 PM IST

குடியாத்தம், ஜூலை 25: குடியாத்தம் ராஜகோபால் பாலிடெக்னிக் கல்லூரியில், சமுதாய முன்னேற்ற திட்டம் சார்பில், வீடுகளில் காய்கறி தோட்டம் அமைப்பது குறித்த பயிற்சி மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

கல்லூரி முதல்வர் ஆர்.ஜே. குமார் தலைமை தாங்கினார். ரோட்டரி சங்கத் தலைவர் ஜி. புருஷோத்தமன், சமுதாய முன்னேற்ற திட்ட ஒருங்கிணைப்பாளர் ஜி. இளங்கோவன், ரோட்டரி பிரமுகர் டி. ராஜேந்திரன் ஆகியோர் மாணவர்களுக்கு பயிற்சி அளித்தனர். பயிற்சியின் நிறைவில் கல்லூரியில் 1,000 காய்கறி செடிகள் நடப்பட்டன.

**நிலக்கடலை சாகுபடி தொடங்கியது: அதிக மகசூல் பெற வேளாண் அதிகாரி யோசனை**

First Published : 26 Jul 2010 11:11:47 AM IST

Last Updated : 26 Jul 2010 12:26:41 PM IST

தருமபுரி, ஜூலை 25: எண்ணெய் நிலக்கடலையில் அதிக மகசூல் பெற நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தலாம் என்று தருமபுரி மாவட்ட வேளாண்மை உதவி இயக்குநர் மனோகரன் கூறினார்.

தருமபுரி மாவட்டத்தில் தற்போது பருவ மழை பரவலாகப் பெய்துள்ளதால். நிலக்கடலை சாகுபடி தொடங்கியுள்ளது.

இந்நிலையில், சாகுபடியில் அதிக மகசூல் பெறுவது குறித்து மனோகரன் வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பது:

நிலக்கடலை பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகள் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தினால், 15 சதவீதம் முதல் 20 சதவீதம் வரை கூடுதல் மகசூல் பெறலாம்.

விதை நிலக்கடலையை விதைக்கும் முன் உயிர் உரங்களான ரைசோபியம் (கடலை) 3 பாக்கெட், பாஸ்போ பாக்டீரியா பாக்கெட்டை சூடு குறைந்த அரிசிக் கஞ்சியில் கலந்து 24 மணி நேரத்துக்குள் விதைக்க வேண்டும். விதைப்புக்கு முன், ஒரு ஏக்கருக்கு 5 கிலோ கடலை நுண் சத்தை மணலுடன் கலந்து விதைக்க வேண்டும். பயிருக்குத் தேவையான பேரூட்டச் சத்துகளுடன், நுண்ணூட்டச் சத்துகளும் பயிருக்கு கிடைத்து அதிக மகசூல் பெறலாம்.

ஜிப்சம் 80 கிலோவை மேலுரமாகவும், அடியுரமாகவும் விதைத்து 40 அல்லது 45 நாள்களில் செடிகள் பூத்து விழுதுகள் இறங்கும் காலத்தில் வயலில் இட்டு மண் அணைக்க வேண்டும். மேலுரமாக இடும்போது, வயலில் போதிய ஈரப்பதம் இருக்க வேண்டும்.

இதனால் மண் பொலபொலவென இருப்பதால், விழுதுகள் இறங்கி காய்ப் பிடிக்க உதவும். காய்கள் முற்றி, தரமான நிலக்கடலை உருவாக சுண்ணாம்புச் சத்தும், எண்ணெயில் புரத அளவு அதிகரிக்க கந்தகச் சத்து உதவகிறது.

பூ, பிஞ்சு உதிர்வதை தடுக்க, பயிர் பூக்கும் தருணத்தில் நாள்கள் கழித்து மீண்டும் நுண்ணூட்டக் கரைசல் தெளிக்க வேண்டும். இரண்டு கிலோ டி.ஏ.பி. உரத்தை தண்ணீரில் கரைத்து 1 நாள் ஊறவைத்து, மறுநாள் தெளிந்த கரைசலை வடிகட்டியப் பிறகு மற்ற உரங்களைக் கரைத்து 490 லிட்டர் நீரில் கலந்து தெளித்தால் பூ மற்றும் பிஞ்சு உதிர்வதைத் தடுத்து, அதிகமான மகசூல் பெறலாம் என்று அவர் கூறினார்.

**நீர் மேலாண்மையை தீவிரப்படுத்த விவசாயிகள் கோரிக்கை**

First Published : 26 Jul 2010 11:11:56 AM IST

தருமபுரி, ஜூலை 25: விவசாயத்தில் நீர் மேலாண்மையை தீவிரப்படுத்த மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மழை அளவு குறைந்துள்ளதால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு விவசாய உற்பத்தி பாதிக்கப்படுகிறது. மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது, தமிழகத்தில் நீர் மேலாண்மை குறைவாகவே உள்ளது. விவசாயத்தில் நீர் மேலாண்மையை தீவிரப்படுத்தினால் உற்பத்தியை பெருக்க முடியும் என்று வேளாண் துறை யோசனை தெரிவித்து வருகிறது.

விவசாயத்தில் தெளிநீர் பாசனம் மற்றும் சொட்டு நீர்ப் பாசனம் உள்ளிட்டவற்றை அதிக அளவில் கையாண்டால், குறைந்த நீரில் அதிக மகசூல் பெறலாம் என்று வேளாண் துறையினர் தெரிவிக்கின்றனர்.

தற்போது, விவசாயத்தில் 75 சதவீதம் நீர் நெல் சாகுபடிக்குத்தான் பயன்படுத்தப்படுகிறது. சொட்டுநீர் பாசன முறை குறித்து விவசாயிகளிடம் போதிய விழிப்புணர்வு இல்லாததால், கால்வாய்ப் பாசனம் மூலம் தண்ணீர் கொண்டு செல்லப்படுகிறது. இதனால் நீர் விரயமாகிறது.

எனவே, தெளிநீர் பாசனம், சொட்டுநீர் பாசனம் குறித்து போதிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, மானிய விலையில் கருவிகளை வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சொட்டுநீர் பாசனம் அமைக்க தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் அதிகபட்சமாக ரூ.37,440 மட்டுமே மானியமாக வழங்கப்படுகிறது. ஆனால், தமிழகத்தில் ஒரு ஹெக்டேருக்கு ரூ.1 லட்சம் வரை செலவாகிறது. பல ஆண்டுகளுக்கு முன் வழங்கப்பட்ட மானிய அளவே தற்போதும் உள்ளது. இதனால், விவசாயிகள் இதை செயல்படுத்துவதில் தயக்கம் காட்டுகின்றனர்.

ஆந்திரம் உள்ளிட்ட பல மாநிலங்களில் சொட்டுநீர் பாசனம் அமைக்க விவசாயிகளுக்கு 85 சதவீதம் மானியம் அளிக்கப்படுகிறது. இதேபோல் தமிழக அரசும் வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் தலைவர் எஸ்.ஏ. சின்னசாமி கோரியுள்ளார்.

மேலும், விவசாயிகளுக்கும் வேளாண் அதிகாரிகளுக்கும் நீர் மேலாண்மை பற்றி தீவிரப் பயிற்சி அளிக்க வேண்டும் என்றும் விவசாயிகள் கோரியுள்ளனர்.

**இயற்கை வேளாண்மை கலந்துரையாடல்**

First Published : 26 Jul 2010 11:07:32 AM IST

ஈரோடு, ஜூலை 25: ஈரோடு மாவட்டம், கவுந்தப்பாடி ஜெயம் பிராணி நல அறக்கட்டளை சார்பில் இயற்கை வேளாண்மை கலந்துரையாடல் கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது.

அறக்கட்டளை நிர்வாக அறங்காவலரும், பிராணிகள் நல அலுவலருமான கே.வி.கோவிந்தராஜ் தலைமை வகித்தார். பெண்கள் உரிமைக் கழக உறுப்பினர் ஜி.ஜெயலட்சுமி, அறக்கட்டளை நிர்வாகிகள் மாலதி, சிவ.தணிகைவேல், ஜெ.தியாகராஜன், டாக்டர் சுமதி, டாக்டர் உமாமகேஸ்வரி, ஜி.கார்த்திகேயன், டாக்டர் சசிக்குமார், சி.ரத்தினம் மற்றும் ஜெயம் மகளிர் சுயஉதவிக்குழுவினர் கலந்து கொண்டனர்.

இந்திய தேசிய நாட்டின மாடுகளான காங்கேயம், கான்ங்ரெஜ், ஷாஹிவால், கிர், தார்பார்க்கர், சிகப்பு சிந்தி ஆகியவற்றை வளர்ப்பதன் அவசியம், இயற்கை வேளாண்மையால் ஏற்படும் நன்மைகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, வாகனங்களினால் ஏற்படும் நச்சுத்தன்மை, ரசாயன உரத்தை உபயோகித்து நஞ்சாகிப்போன விளைநிலம், அவற்றால் ஏற்படும் பாதிப்புகள், கால்நடை வளர்ப்பு, பிராணிகள் வதை செய்யப்படுவதைத் தடுத்தல், கால்நடைகளுக்கு பாரம்பரிய வைத்திய முறைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

பஞ்சகவ்யம், ஜீவாமிர்தம், மீன் அமினோ அமிலம், அமுதக்கரைசல் தயாரிக்கும் முறைகள், பயன்படுத்தும் அளவு குறித்த கையேடும், கால்நடைகளுக்கான மரபுவழி மூலிகை வைத்தியம் செய்வது தொடர்பான கையேடும் வழங்கப்பட்டன. இயற்கை வேளாண்மை பாதுகாப்பு, பிராணிகள் வதை தடுப்பு, சுற்றுச்சூழல் பாதிப்பு தொடர்பாக விழிப்புணர்வு இயக்கங்கள் நடத்துவது என கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

**மின் கம்பி உரசியதில் தீயில் கருகி நெல் பட்டறை நாசம்**

First Published : 27 Jul 2010 08:58:00 AM IST

திருவாடானை, ஜூலை 26: திருவாடானை தாலுகா ஏழுர் கிராமத்தில் 100 மூட்டை கொள்ளளவு கொண்ட நெல் பட்டறை மின் கம்பி உரசியதில் தீயில் கருகி நாசமானது.

திருவாடானை தாலுகா ஏழுர் கிராமத்தில் வசிப்பவர் வேலாணி. இவர், தங்களது வயலில் விளைந்த சுமார் 100 மூட்டை நெல்லை வீடடு வாசலில் நெல் பட்டறையாகக் கட்டி வைத்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை மாலையில் மின் கம்பி உரசியதால், நெல் பட்டறையில் தீ மளமளவென பற்றி எரிந்து நாசமானது. இது தொடர்பாக, திருவாடானை வருவாய்த் துரையினர் விசாரித்து வருகின்றனர்.

**தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் ரூ.1 கோடிக்கு மேல் கடன் வழங்க இலக்கு**

First Published : 26 Jul 2010 11:06:22 AM IST

ஈரோடு, ஜூலை 25: ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களும் ரூ.1 கோடிக்குமேல் கடன் வழங்க வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் சா.பாபு கூறினார். மாவட்ட கூட்டுறவு ஒன்றியம் சார்பில் பெருந்துறை அருகேயுள்ள கருமாண்டிசெல்லிபாளையம் நடுநிலைப் பள்ளியில் நடைபெற்ற கூட்டுறவு உறுப்பினர் கல்வித் திட்ட முகாமில், 44 பேருக்கு ரூ.14.3 லட்சம் பயிர்க்கடன் வழங்கி அவர் பேசியது: மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ள 225 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்களில், 181 சங்கங்கள் மட்டுமே ரூ.1 கோடிக்கு மேல் கடன்களை வழங்கி வந்தன. 44 சங்கங்கள் ரூ.1 கோடிக்குக் குறைவாக கடன்கள் வழங்கின. அதிக கடன் வழங்க எடுக்கப்பட்ட தொடர் முயற்சி காரணமாக, மேலும் 13 சங்கங்கள் ரூ.1 கோடிக்கும் மேல் கடன்களை வழங்கியுள்ளன. அனைத்து சங்கங்களும் இம்மாத இறுதிக்குள் தலா ரூ.1 கோடிக்குமேல் கடன் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அரசு வழங்கும் பயிர்க்கடன், சிறுநீர்ப்பாசனக் கடன், சிறுவணிகக் கடன் உள்ளிட்ட கடன் திட்டங்களை கூட்டுறவு உறுப்பினர்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார். மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி தனி அலுவலர் ப.லோகநாதன் பேசுகையில், உறுப்பினர்கள் பயிர்க்கடன் பெற, அருகில் உள்ள வங்கிகளில் நிலுவையில்லா சான்றிதழ் பெற வேண்டும். பணிக்கம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கம் ரூ.37 லட்சம் மட்டுமே கடன் வழங்கியுள்ளது. இம்மாத இறுதிக்குள் ரூ.1 கோடிக்கு மேல் கடன் வழங்க உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றார்.

கருமாண்டிசெல்லிபாளையம் பேரூராட்சி முன்னாள் தலைவர் க.ர.பழனிசாமி, முன்னாள் துணைத் தலைவர் கே.எம்.பழனிசாமி, கூட்டுறவு பிரசார அலுவலர் செ.ஆனந்த்ராஜ், கள மேலாளர் எஸ்.சிவலிங்கம் பேசினர். பணிக்கம்பாளையம் சங்கச் செயலர் வி.சுப்பிரமணியம் நன்றி தெரிவித்தார்.

தினமலர்

**மஞ்சள் பயிருடன் ஊடு பயிராகசிறிய வெங்காயம் சாகுபடி**

பதிவு செய்த நாள் : ஜூலை 27,2010,03:20 IST

தியாகதுருகம்:மஞ்சள் பயிருடன் ஊடு பயிராக சிறிய வெங்காயம் சாகுபடி செய்து இரட் டிப்பு லாபம் பெறும் முயற்சியில் தியாகதுருகம் பகுதி விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.ஓராண்டில் விளைந்து நல்ல லாபம் தரக்கூடிய நம்பகமான பயிராக மஞ்சள் சாகுபடி இருந்து வருகிறது. பயிர் நடவு செய்து பராமரிப்பது சிரமமில்லை என்றாலும், அறுவடையின்போது கூடுதல் ஆட்களை வைத்து செய்ய வேண்டிய நிலை உள்ளது. மஞ்சள் விளைந்ததும், கிழங்கை வெட்டியெடுத்து அதை வேக வைத்து இயந் திரத்தில் இட்டு பாலிஷ் செய்து விற்பனைக்கு கொண்டு செல்ல வேண்டும்.

இச்சிரமங்களை தவிர்க்க பெரும்பாலான விவசாயிகள் மஞ்சள் சாகுபடியை தவிர்த்து வருகின் றனர். இருப்பினும், நம்பகமான விலை கிடைப்பதால் கூடுதல் லாபம் பெற முடியும் என்பதால் விவசாயிகள் சிலர் தியாகதுருகம் பகுதியில் மஞ்சள் சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.சமீப காலமாக மஞ்சள் பயிருடன் சிறிய வெங்காயத்தை ஊடு பயிராக சாகுபடி செய்யும் முறை விவசாயிகளிடம் பிரபலம் அடைந்து வருகிறது. நான்கு மாதத்தில் பலன்தரக்கூடிய சிறிய ரக வெங் காயத்தை மஞ்சள் பயிரிடும்போது அவைகளுக்கிடையில் நடவு செய்கின்றனர். இருபயிர்களுமே கிழங்கில் பலன் தரக்கூடியதாக இருப்பதால் ஒரே மாதிரியான உரங்களையும், மருந்துகளையும் இட்டு பராமரிக்க வசதியாக உள்ளது.

நான்கு மாதத்தில் அறுவடைக்கு தயாராகும் சிறிய வெங்காயம் வெட்டி எடுக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு ஏக் கருக்கு 50 ஆயிரம் ரூபாய் வரை சிறிய வெங்காயம் சாகுபடியில் லாபம் கிடைக் கிறது. ஒரே சமயத்தில் இரு பயிர்களை சாகுபடி செய்து இரட்டிப்பு லாபம் கிடைப் பதால் மஞ் சள் பயிரில் சிறிய வெங்காயம் சாகுபடி செய்வதில் தியாகதுருகம் பகுதி விவசாயிகள் ஆர் வம் காட்டி வருகின்றனர்.

**கொள்முதல் விலையை உயர்த்தகோரி ஆர்பாட்டம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 27,2010,04:31 IST

வேலூர் : தமிழக விவசாயிகள் சங்கத்தின் சார்பில் பால் கொல் முதல் விலையை உர்த்த கோரி வேலூரில், கலெக்டர் அலுவலகம் அருகே ஆர்ப்பாட்டம் நடந்தது.

லிட்டருக்கு 5 ரூபாய் நேரடி மானியம் வழங்ககோரியும், பசும்பாலுக்கு 25 ரூபாயும், எருமைபாலுக்கு 30 ரூபாயும் உயர்த்தி தரக்கோரி நடந்த ஆர்பாட்டத்தை மாவட்ட தலைவர் கண்ணையா நாயூடு தொடங்கி வைத்தார். ஆர்பாட்டத்தின் முடிவில் கலந்து கொண்டவர்கள் பால்குடங்களை உடைத்து கோஷங்களை எழுப்பினர். இறுதியில், தங்களது கோரிக்கைகள் அடங்கிய மனுவை மாவட்ட கலெக்டரிடம் வழங்கினர்.

**புவனகிரி பகுதி விவசாயிகள் "எள்' பயிர் செய்வதில் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 27,2010,03:39 IST

புவனகிரி:புவனகிரி பகுதி விவசாயிகள் எள் பயிர் செய்வதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.கடலூர் மாவட்டத்தில் 697 எக்டரில் மானாவாரி பயிரான எள் பயிர் செய் யப்பட்டுள்ளது. எக்டருக்கு 500 கிலோ வரை விளைச்சல் கிடைக்கும் எள் மூட்டை (80 கிலோ) தற்போது 3, 200 முதல் 3,800 வரை விலை கிடைக் கிறது. கடலூர் முதுநகர் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் 26.4 மெட்ரிக் டன், பண்ருட்டியில் 189.6, விருத்தாசலத்தில் 2,056, திட்டக்குடியில் 91, குறிஞ்சிப்பாடியில் 686.4, ஸ்ரீமுஷ்ணத்தில் 28.5 மெட் ரிக் டன்னும் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.
காவிரி டெல்டா பகுதியான குமராட்சியில் மட்டும் இந்த ஆண்டு 140 எக்டர் எள் பயிர் செய்யப்பட்டுள்ளது. தற்போது புவனகிரி பகுதியிலும் விவசாயிகள் எள் பயிர் செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.காரணம் நெல் 100 கிலோ கொண்ட மூட்டை ஒன்றுக்கு 1,100 ரூபாய் மட்டுமே கிடைக்கும் இந்த நிலையில் அதிக விலைக்கு போகும் மானாவாரி பயிரான எள் பயிர் செய்வதில் அதிக ஆர்வம் காட்டி வருவதாக கூறப்படுகிறது.

**பால் விலையை உயர்த்த கோரிக்கை பால் குடங்களுடன் ஆர்ப்பாட்டம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 27,2010,03:25 IST

சேலம்: "கூட்டுறவு சங்கங்களுக்கு பால் வழங்கும் உற்பத்தியாளர்களுக்கு, பாலுக்கான கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க வேண்டும்' என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, பால் குடங்களுடன் விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
தமிழகம் முழுவதும், "பாலுக்கான கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும்' என, பால் உற்பத்தியாளர்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தி வந்தனர். தற்போது, விவசாயிகள் சங்கத்தினர், "பால் விலையை உயர்த்த வேண்டும்' என வலியுறுத்தி, மாநிலம் முழுவதும் ஆவின் ஒன்றியங்கள் முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.
சேலம், நாமக்கல் மாவட்ட பால் கூட்டுறவு சங்கங்களில் இருந்து ஆவின் ஒன்றியத்துக்கு தினந்தோறும் 4.50 லட்சம் லிட்டர் பால் கொண்டு வரப்படுகிறது. இத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள், கூட்டுறவு சங்க உறுப்பினராகவும் உள்ளனர். கறவை

மாடுகள் மூலம் உற்பத்தி செய்யக்கூடிய பாலுக்கு 30 ரூபாய் வரை செலவு ஆகிறது. ஆனால், கூட்டுவு சங்கத்திலோ ஒரு லிட்டருக்கு 13 முதல் 15 ரூபாய் வரை மட்டுமே வழங்கப்படுகிறது. உற்பத்தி செலவில் பாதி தான் கிடைப்பதால் விவசாயிகள் நஷ்டமடைந்து வருகின்றனர். மாடுகளுக்கு தீவனம் வாங்கி போட முடியாத நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். நஷ்டத்தை தவிர்க்கும் பொருட்டு, அடிப்படை விலையாக பசும்பால் லிட்டருக்கு 25 ரூபாயும், எருமைப்பால் லிட்டருக்கு 30 ரூபாயும் வழங்க வேண்டும் என வலியுறுத்தி, சேலம் ஆவின் நிறுவனம் முன், நேற்று விவசாயிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

தமிழக விவசாயிகள் சங்க மாநில பொதுச்செயலாளர் சுந்தரம் கூறியதாவது: கறவை மாடுகளுக்கு ஆவின் மூலம் வழங்கப்படும் தீவனத்தை பாதி விலையில் மானியமாக வழங்க வேண்டும். விவசாயிகள், கறவை மாடுகள் வாங்க வட்டியில்லா கடன் உதவி வழங்க வேண்டும்.

மேலும், பால் உற்பத்திக்கு அதிகப்படியாக செலவாகிறது. பசும்பாலுக்கு 25 ரூபாயும், எருமைப்பாலுக்கு 30 ரூபாயும் வழங்க வேண்டும் என அரசை வலியுறுத்தினோம். அரசு தரப்பில் கண்டுகொள்வதாக தெரியவில்லை. எனவே தான் மாவட்ட வாரியாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டு வருகிறது. சேலத்தில் பால் குடங்களுடன் 500க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். ஆவின் பொது மேலாளரிடம் மனுவை அளித்தோம். அரசுக்கு அனுப்பி வைக்கிறேன் என தெரிவித்துள்ளார். இவ்வாறு அவர் கூறினார்.

**சம்பா நெல் சாகுபடி துவக்கம் : விதை நெல் விலை அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஜூலை 27,2010,03:18 IST

மேட்டூர்: அரசு நெல் கொள்முதல் விலையை உயர்த்தியுள்ளதால், நடப்பாண்டில் விதை நெல் விலையும் அதிகரித்துள்ளது.

மேட்டூர், கொளத்தூர் பகுதி விவசாயிகள் சம்பா சாகுபடியின் போது 150 நாள் பயிரான வெள்ளை பொன்னி, 125 நாள் பயிரான ஐ.ஆர்.20 நெல் ரகங்களையே அதிக அளவில் நடவு செய்வது வழக்கம். தற்போது விவசாயிகள் சம்பா சாகுபடிக்கான ஆயத்த பணிகளை துவங்கி விட்டனர். விவசாயிகளுக்கு வழங்குவதற்காக கொளத்தூர் வேளாண் விரிவாக்க மையத்தில் கடந்த ஆண்டு ஐந்து டன் வெள்ளை பொன்னி விதை நெல் இருப்பு வைத்திருந்தனர். அந்த நெல் விற்று தீர்ந்ததால் விவசாயிகள் ஏராளமானோர் கோபிசெட்டிபாளையம் சென்று விதை நெல் வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

நடப்பாண்டில் பற்றாக்குறை ஏற்படாமல் இருக்க கொளத்தூர் மையத்தில் ஏழு டன் வெள்ளை பொன்னி விதை நெல், 8 டன் ஐ.ஆர்.20 ரக நெல் விதையும், காவேரிகிராஸ் துணை வேளாண் வட்டார மையத்தில் 10 டன் வெள்ளை பொன்னி, 3.5 டன் ஏ.டீ.டி.,43 நெல் விதை இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு வேளாண்துறை சார்பில் வெள்ளை பொன்னி விதை நெல் ஒரு கிலோ 19 ரூபாய்க்கு விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டது. சந்தையில் வெள்ளை பொன்னி நெல்

விலை அதிகரித்ததால் நடப்பாண்டில் ஒரு கிலோ வெள்ளை பொன்னி விதை நெல் 31.95 ரூபாய்க்கும், கடந்த ஆண்டு 18.15 ரூபாய்க்கு விற்ற ஐ.ஆர்.20 நெல் தற்போது 19.90 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

**தரமான பருத்தி விதைகளை வாங்க விவசாயிகளுக்கு அதிகாரி யோசனை**

பதிவு செய்த நாள் : ஜூலை 27,2010,01:00 IST

தர்மபுரி: "தரமான பருத்தி விதைகளை தேர்ந்தெடுத்து வாங்க வேண்டும்' என, விவசாயிகளுக்கு விதை ஆய்வு துணை இயக்குனர் பழனிசாமி யோசனை தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் பருவ மழை பெய்து வருவதால், விவசாயிகள் பருத்தியினை பயிரிட்டு வருகின்றனர். பருத்தி பயிர் செய்யும் விவசாயிகள் தரமான விதையினை தேர்வு செய்து பயிரிட வேண்டும் என்று விதை ஆய்வு துணை இயக்குனர் பழனிசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தற்போது கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் பருவமழை பெய்து வருவதால் விவசாயிகள் பருத்தியினை பயிரிட்டு வருகின்றனர். தரமான விதைகளை தேர்ந்தெடுத்து பயிரிட்டால் மட்டுமே நல்ல மகசூலை பெறமுடியும். விதை விற்பனைக்கான உரிமம் பெற்ற கடைகளிலேயே விவசாயிகள் பருத்தியினை வாங்க வேண்டும். பி.டி., பருத்தி விதைகளை வாங்கும் போது விபர அட்டையில் பயிர், ரகம், குவியல், எண், முளைப்புத்திறன், காலாவதி தேதி உள்ளிட்ட விவரங்கள் சரியாக உள்ளதா என்பதை பார்த்து வாங்க வேண்டும்.

பி.டி., பருத்தி விதை கொள்கலன்களில் எந்த மாநிலத்திற்கு, எந்தப்பருவத்தில் பயிரிடலாம் என்பது குறிப்பிடப்பட்டிருக்கும். அதை பார்த்து விசாரித்த பின்னரே விவசாயிகள் பருத்தி விதையை வாங்க வேண்டும். விதை வாங்கும் போது விதை விற்பனையாளர்களிடம் அவசியம் விற்பனைப் பட்டியலை வாங்க வேண்டும். பி.டி., பருத்தி விதையுடன் வழங்கும் பி.டி., நஞ்சற்ற பருத்தி விதையினை பருத்தி பயிரிட்ட வயலை சுற்றியும் குறைந்தது ஐந்து வரிசைகள் பயிரிட வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**மண்புழு உரத்தில் மாத வருமானம் ரூ.1.50 லட்சம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 27,2010,02:14 IST

ஈரோடு: மொடக்குறிச்சி அருகே சாமிநாதபுரத்தில் மாதம் 50 டன் மண்புழு உரம் உற்பத்தி செய்து தமிழகத்தின் பல பகுதிக்கும், கர்நாடகா மாநில விவசாயிகளுக்கும் அனுப்பப்படுகிறது.

மொடக்குறிச்சி அருகே சாமிநாதபுரத்தை சேர்ந்தவர் விவசாயி அர்த்தநாரீஸ்வரர். இவர் மூன்று ஆண்டாக மண்புழு உரம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு, மாநிலத்தின் பல இடங்களுக்கு விவசாயிகளுக்கு மண்புழு உரத்தை விற்பனை செய்து வருகிறார்.

அவர் கூறியதாவது: ஊரை விட்டு சற்று தள்ளிய இடத்தில், இயற்கை சூழலில் மண்புழு உரம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம். மண்புழு உரம் இயற்கை உரமாக இருப்பதால், பயிர்களுக்கு எந்த காலத்திலும் பாதிப்பு வராது. பத்து லட்சம் ரூபாய் மதிப்பில் ஷெட், தெளிப்பு நீர் கருவிகள், 11 தொட்டிகள் வாங்கியுள்ளோம். இவற்றில் இரண்டு தொட்டிகளில் மண்புழுக்கள் வளர்க்கப்படுகின்றன. மண்புழுக்கள் நன்றாக வளர்வதற்காக பலவிதமான கழிவு பொருட்கள் வழங்கப்படுகின்றன. ஷெட்களின் நடுவில் தேங்காய் மட்டை, தேங்காய் நார், தென்னை இலைகள், கிழிந்த வாழை இலைகள், டிபன் இலைகள், மாடு, எருமை சாணம், மாட்டு சிறுநீர் உட்பட பல்வேறு கழிவுப்பொருட்களை போட்டு பாதுகாத்து வருகிறோம். கழிவு பொருட்களின் மீது எப்போதும் ஈரத்தன்மை இருக்க வேண்டும் என்பதற்காக தெளிப்பு நீர் கருவி மூலம் தண்ணீர் தெளிக்கப்படுகிறது.

கழிவு பொருட்களை இரண்டு தொட்டியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள மண்புழுக்களுக்கு இரையாக போட்டு விடுவோம். மண்புழுக்கள் அந்த கழிவு பொருட்களை சாப்பிட்டு மண்ணுக்குள் இதமாக படுத்துவிடும். மண்புழுக்களின் கழிவுகளை நாங்கள் பயிர்களுக்கு இயற்கை உரமாக பயன்படுத்தி வருகிறோம். எனது மகன் அரவிந்தும் மண்புழு வளர்ப்பில் ஈடுபடுகிறார். இரண்டு தொட்டியில் வளர்க்கப்படும் மண்புழுக்கள் கழிவு பொருட்களை சாப்பிட்ட பிறகு, அவற்றை மூன்றாவது தொட்டியில் போட்டு விடுவோம். அதிலிருந்து மண்புழு உரம் தயாரிக்கப்படுகிறது. மண்புழுக்களுக்கு வெப்பம் ஆகாது. எனவே, ஷெட்டை சுற்றி சூரிய வெப்பம் மறைக்கும் வகையில் டெண்ட் அமைக்கப்பட்டுள்ளது. மண்புழுக்களின் கழிவுகள் மீதும், மண்புழு வசிக்கும் தொட்டியின் மீதும் எப்போதும் குளிர்ந்த நீர் விழும்படி தெளிப்பு நீர் பாசனம் முறையை கடைபிடித்து வருகிறோம். மண்புழு உரங்களை தயாரிக்கும் போது, மிகவும் தெளிவாக இருக்கும்படி சல்லடையில் அலசி பிறகு விற்பனைக்கு கொண்டு செல்கிறோம். ஒரு கிலோ மண்புழு உரம் 3.50 ரூபாய்க்கு விவசாயிகளுக்கு விற்பனை செய்கிறோம்.

ஓசூர், கர்நாடகா மாநிலம் பெங்களூரு பகுதிக்கும் இங்கிருந்து மண்புழு உரம் அனுப்பப்படுகிறது. மாதம் 50 டன் மண்புழு உரம் உற்பத்தி செய்யப்படுகிறது. மாதம் 1.50 லட்சம் ரூபாய் வருமானம் கிடைக்கிறது. இத்தொழிலில் ஏழு தொழிலாளர்கள் ஈடுபடுகின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

**தமிழகம், கேரளாவில் முட்டை விலை சரிவு**

பதிவு செய்த நாள் : ஜூலை 27,2010,02:58 IST

நாமக்கல்: தமிழகம், கேரளாவில் முட்டை விலை 235 காசுகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இரு தினங்களில் முட்டை விலை 20 காசு சரிந்துள்ளது.நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து 245 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை விலை 10 காசு குறைத்து 235 காசாக நிர்ணயிக்கப்பட்டது. இரு தினங்களில் முட்டை விலை 20 காசு சரிந்துள்ளதால், கோழிப்பண்ணையாளர்கள் கவலையடைந்துள்ளனர்.
நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை விவரம்: ஹைதராபாத் 218 காசு, விஜயவாடா, தனுகு 220 காசு, சென்னை 250 காசு, மைசூரு 235 காசு, பெங்களூரு 230 காசு, மும்பை 244 காசு, டில்லி 210 காசு, பார்வாலா 192, கோல்கத்தா 240 காசு.
நாமக்கல்லில் நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் முட்டைக் கோழி விலை 1 ரூபாய் குறைத்து 38 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை 45 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது.

**பொள்ளாச்சியில் பருவமழை தீவிரம்: அணைகளில் நீர்மட்டம் உயர்வு**

பதிவு செய்த நாள் : ஜூலை 27,2010,00:06 IST

பொள்ளாச்சி: பொள்ளாச்சி உள்ளிட்ட சமவெளிப்பகுதிகளில் கடந்த இரண்டு நாட்களாக பருவமழை தீவிரமடைந்துள்ளது.வால்பாறை உள்ளிட்ட பகுதிகளிலும், பொள்ளாச்சி, ஆனைமலை பகுதிகளிலும் கடந்த ஒரு மாதமாக தென்மேற்கு பருவமழை தீவிரமாக பெய்து வருகிறது. இதனால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து அணைகளின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. கடந்த ஒரு வாரமாக இடைவெளி விட்டிருந்த மழை, தற்போது மீண்டும் தீவிரமடைந்துள்ளது.

ஆழியாறு அணையில் 102.20 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு விநாடிக்கு 194 கனஅடி நீர் வரத்தும், 186 கனஅடி வெளியேற்றமும் உள்ளது. திருமூர்த்தி அணையில் 29.94 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு விநாடிக்கு 20 கனஅடி நீர் வரத்தும், 18 கனஅடி வெளியேற்றமும் உள்ளது.அமராவதி அணையில் 49.68 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு விநாடிக்கு 426 கனஅடி நீர் வரத்தும், 601 கனஅடி வெளியேற்றமும் உள்ளது.

நேற்று காலை 8.00 மணி வரை பதிவான மழையளவு(மில்லிமீட்டரில்) : சோலையாறு- 22, பரம்பிக்குளம்- 15, ஆழியாறு- 1.2, மேல்நீராறு- 34, கீழ்நீராறு- 16, வால்பாறை- 17, காடம்பாறை- 3, பொள்ளாச்சி- 20, மணக்கடவு- 19.2, சர்க்கார்பதி- 2 என்ற அளவில் மழை பெய்தது.வால்பாறை: கடந்த நான்கு நாட்களாக வால்பாறையில் தென்மேற்குப்பருவ மழையின் வேகம் குறைந்திருந்தது. இந்நிலையில் நேற்றுமுன்தினம் இரவு முதல் வால்பாறை டவுன் மற்றும் எஸ்டேட் பகுதிகளில் விடிய, விடிய கன மழை பெய்தது.கன மழையின் காரணமாக கவர்க்கல் எஸ்டேட் , வாட்டர்பால்ஸ் உள்ளிட்ட எஸ்டேட் பகுதிகளில் பனிப்பொழிவு அதிகமாக காணப்பட்டது. இதனால் எதிரே வரும்வாகனங்கள் கண்ணுக்கு தெரியாமலும், தொழிலாளர்கள் தேயிலை பறிக்க முடியாமலும் தவித்தனர்.

வால்பாறையில் தொடர்ந்து பெய்துவரும் கன மழையினால் 160 அடி கொள்ளவு கொண்ட சோலையாறு அணையின் நீர்மட்டம் நேற்று காலை 98.63 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு ஆயிரத்து 742 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து மானாம்பள்ளி பவர் ஹவுஸ் வழியாக பரம்பிக்குளத்திற்கு 835 கன அடி தண்ணீரும், கேரள சோலையாறுக்கு 703 கன அடி தண்ணீரும் வெளியேற்றப்படுகிறது.

**தேயிலைக்கான "சர்வதேச விருது' ரகசியம் அம்பலம்:"கவாத்து திட்டம்' நிகழ்ச்சியில் வெளிவந்தது**

பதிவு செய்த நாள் : ஜூலை 27,2010,00:54 IST

குன்னூர்:"தேயிலைத் தோட்டங்களில் சாகுபடி நிர்வாக முறையை கையாண்டால், அதிக மகசூல் காலங்களில் பசுந்தேயிலை வீணாகும் அவலம் வராது; நீலகிரி தேயிலைக்கு சர்வதேச விருது கிடைப்பதற்கான ரகசியம், கவாத்துக்குள் ஒளிந்திருக்கிறது' என, உபாசி அதிகாரிகள் கூறினர்.

தேயிலை வாரியம், உபாசி வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் நடத்தப்பட்ட "தேயிலை தோட்டங்களில் கவாத்து திட்டம்' துவக்க நிகழ்ச்சியில், உபாசி வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் டாக்டர்.குமாரவடிவேலு பேசுகையில், ""தேயிலை மகசூல் அதிகரித்துள்ளதால், பல தொழிற்சாலைகள், விவசாயிகளிடம் இருந்து பசுந்தேயிலையை வாங்குவதில்லை; சாலையில் கொட்டும் அவலம் ஏற்பட்டுள்ளதாக, விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர்; பல இடங்களில் இதை பார்க்கவும் முடிகிறது. பெரிய கம்பெனி தேயிலைத் தோட்டங்களில் இத்தகைய நிலை காணப்படுவதில்லை; இதற்கு காரணம், அவர்களின் தோட்ட நிர்வாக முறை தான். பெரிய தோட்ட நிர்வாகங்கள், ஒவ்வொரு ஆண்டும் தங்கள் தோட்டங்களில் நான்கில் ஒரு பகுதியை கவாத்து செய்து, உற்பத்தி வராமல் பார்த்து கொள்கின்றனர். எஞ்சிய மூன்று பகுதிகளில் இருந்து கிடைக்கும் பசுந்தேயிலை மூலம் போதிய வருவாய் ஈட்டுகின்றனர்.

சிறு, குறு விவசாயிகள் அவ்வாறு செய்வதில்லை; விவசாயிகள் தங்கள் தோட்டங்களை நான்கு பாகமாக பிரித்து, அதில், ஒவ்வொரு ஆண்டும் ஒரு பகுதியை கவாத்து செய்ய வேண்டும்; செடிகளின் ஆரோக்கியம் காப்பாற்றப்படுவதோடு, அதிகளவு மகசூல் பெற முடியும்; இந்த ரகசியத்தை விவசாயிகள் தெரிந்துக் கொள்ளாமல் உள்ளனர்," என்றார்.

உபாசி கேவிகே., விவசாயப் பொறியாளர் ராமமூர்த்தி பேசியதாவது:நீலகிரியில், ஒரு லட்சம் ஏக்கர் பரப்பளவில் தேயிலை சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆண்டு தோறும் 20-25 ஆயிரம் ஏக்கர் வரை கவாத்து செய்ய வேண்டியது அவசியம். சில ஆண்டுகளாக சர்வதேச அளவில் நடத்தப்படும் "கோல்டன் லீப் இந்தியா விருது'க்கான போட்டியில் சிறு, குறு விவசாயிகள் வழங்கும் பசுந்தேயிலை மூலம், தேயிலைத் தூளை உற்பத்தி செய்யும் பல தொழிற்சாலைகள் விருதுகளை பெறுகின்றன. விவசாயிகள் வழங்கும் பசுந்தேயிலை, உலகத் தரத்துக்கு இணையானது என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது. சர்வதேச விருது பெறும் தேயிலை தூள்கள், கவாத்து செய்து, முதல், இரு ஆண்டுகள் முடிந்த தேயிலைத் தோட்டத்தில் இருந்து பறிக்கப்படும் பசுந்தேயிலை மூலம் உற்பத்தி செய்யப்பட்டவை என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை.கவாத்து செய்த தோட்டங்களில், முதல் மூன்று ஆண்டுகளில் மகசூல் அதிகரிக்கும்; அடுத்த இரு ஆண்டுகளில் இருந்து மகசூல் குறையத் துவங்கும். விவசாயிகள் இதை உணர்ந்து, கவாத்துக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும். தரமான பசுந்தேயிலைக்கு கூடுதல் விலை கொடுக்க, பல தொழிற்சாலைகள் தயாராக உள்ளன.

நீலகிரியில், ஒவ்வொரு ஆண்டும் 92 மில்லியன் கிலோ தேயிலைத் தூள் உற்பத்தி செய்யப்படுகிறது. தரமான முதல் தர ("ஏ' கிரேடு) பசுந்தேயிலையில் இருந்து உற்பத்தி செய்யப்படும் தேயிலைத் தூளின் அளவு, வெறும் 10 சதவீதம் மட்டுமே. விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ள இக்காலகட்டத்திலும் கூட, "ஏ கிரேடு' தேயிலைக்கு கூடுதல் விலை கிடைக்கிறது.இவ்வாறு, ராமமூர்த்தி பேசினார்.

**நிலக்கடலை விலை "ஜிவ்'**

பதிவு செய்த நாள் : ஜூலை 27,2010,00:34 IST

அவிநாசி:சேவூரில் நடந்த நிலக்கடலை ஏலத்தில், இதுவரை இல்லாத அளவுக்கு விலை அதிகரித்தது. சேவூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நிலக் கடலை ஏலம் நேற்று நடந்தது; 30 மூட்டைகளே வரத்தாக இருந்தது. கடந்த வாரத்தை காட்டிலும் இந்த வாரம் வரத்து குறைவு என்றாலும் கூட, நல்ல விலைக்கு ஏலம் போனது. சேவூர் ஒழுங்குமுறை விற்பனை கூட

வரலாற்றில், ரூ.4,000க்கும் அதிகமாக ஏலம் போனது. காய்ந்த நிலக்கடலை குவிண்டாலுக்கு ரூ.3,900 முதல் ரூ.4,200 வரை, பச்சை நிலக்கடலை ரூ.1,920க்கும் ஏலம் போனது.

ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர் (பொறுப்பு) சண்முகம் கூறுகையில், ""இந்த வார ஏலத்துக்கு வரத்து குறைந்திருந்தாலும் கூட, நல்ல விலைக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டது. சேவூரில் நடந்த ஏலங்களில், இதுவே அதிகபட்ச தொகை. தற் போது விதைப்பு நடவடிக்கைகள் தொடர்வதால், பச்சை ரகத்துக்கும் நல்ல விலை கிடைத்தது,'' என்றார்.

தினத் தந்தி

## அரிசிக்கு மானியம் கொடுப்பதை போல 'கள்'ளுக்கும் மானியம் கொடுக்க வேண்டும் தமிழ்நாடு கள் இயக்கம் கூட்டத்தில் தீர்மானம்

*சென்னை, ஜூலை.27–*

*'அரிசிக்கு மானியம் கொடுப்பதை போல, கள்ளுக்கும் மானியம் கொடுக்கப்பட வேண்டும்' என்று தமிழ்நாடு கள் இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.*

*ஆலோசனை கூட்டம்*

*தமிழ்நாடு 'கள்' இயக்க ஆலோசனை கூட்டம் சென்னையில் நேற்று நடைபெற்றது. கூட்டத்திற்கு அமைப்பாளர் இல.கதிரேசன் தலைமை தாங்கினார். ஒருங்கிணைப்பாளர் செ.நல்லசாமி முன்னிலை வகித்தார்.*

*கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:–*

*★ சங்க கால தமிழ் இலக்கியங்களும் 'கள் மது அல்ல அது உணவின் ஒரு பகுதி' என கூறுகின்றன. இவைகளை தமிழ்நாடு அரசு மட்டும் மதிக்காமல் கடந்த 23 ஆண்டுகளாக கள்ளை இறக்குவதற்கும், பருகுவதற்கும் தடை விதித்துள்ளது. தமிழ்நாடு அரசு விரைவில் நல்லதொரு முடிவை எடுத்து அறிவிக்கும் என்ற எதிர்பார்ப்புக்கு மாறாக, சிவசுப்பிரமணியன் குழுவின் அறிக்கையை வெளியிடாமல் முடக்கி வைத்திருப்பது கண்டிக்கத்தக்கது.*

*கமிட்டி அறிக்கை*

*★ சிவசுப்பிரமணியம் கமிட்டியின் அறிக்கையை ஒரு மாத காலத்திற்குள் தமிழக அரசு வெளியிட தவறினால், 2 தொகுதி கொண்ட 805 பக்கங்கள் அடங்கிய தமிழ்நாடு கள் இயக்கம் வெளியிடும்.*

*★ தமிழ்நாட்டில் முழுமையான மதுவிலக்கு கொண்டு வரப்படும் வரை 'டாஸ்மாக்' விற்பனை மதுக்கள் அனைத்தும் பனை தென்னை பொருட்களை கொண்டே தரமாக தயாரிக்கப்பட வேண்டும். உலக அளவில் சந்தைப்படுத்த வேண்டும்.*

*★ தமிழ் மண்ணின் மரமான பனை மரங்கள் வேகமாக வெட்டப்பட்டும், தோண்டப்பட்டும் வருகின்றது. இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அரசால் தடை விதிக்கப்பட வேண்டும்.*

*கள்ளுக்கு மானியம்*

*★ அரிசிக்கு அரசு ஆண்டுதோறும் 2 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலான மானிய தொகை ஒதுக்கி ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய் விலையில் மக்களுக்கு வழங்கப்பட்டு*

வருகிறது. அரிசியை விட அதிக சத்துகள் கள்ளில் இருப்பதாலும், தாய்ப்பாலுக்கு நிகரானது என்பதாலும், அரிசிக்கு மானியம் கொடுப்பதை போல கள்ளுக்கும் மானியம் கொடுக்கப்பட வேண்டும் என்பது உள்பட 7 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## நவீன தொழில்நுட்ப முறையில் சிறுவாணி குடிநீர் நிமிடத்துக்கு 60 ஆயிரம் லிட்டர் சுத்திகரிப்பு தினமும் 8¾ கோடி லிட்டர் வினியோகம்



சிறுவாணி தண்ணீர் பலமுனை குழாய்கள் மூலம் சுத்திகரிக்கப்பட்டு சுத்தமான குடிநீராக மாற்றும் காட்சி.

கோவை,ஜூலை.27–

கோவைக்கு சப்ளைசெய்யப்படும் சிறுவாணி குடிநீர், நவீன தொழில்நுட்ப முறையில் நிமிடத்துக்கு 60 ஆயிரம் லிட்டர் வீதம் சுத்திகரிப்பு செய்து தினமும் 8 கோடியே 75 லட்சம் லிட்டர் வினியோகிக்கப்படுகிறது.

சுவையான சிறுவாணி குடிநீர்

ஆசியாவிலேயே சுவையான குடிநீர் வரிசையில் சிறுவாணி தண்ணீர் 2–வது இடத்தில் உள்ளது. கோவை நகர மக்களுக்கு இயற்கை அளித்த கொடையாக விளங்கும் சிறுவாணி தண்ணீரை சேமிக்கும் அணை, கோவையில் இருந்து 40 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. இந்த அணை கடல்மட்டத்தில் இருந்து 859 மீட்டர் உயரத்தில் இருப்பதால், கோவை நகருக்கு தண்ணீர் சப்ளை செய்வது எளிதாக உள்ளது. ராட்சத மோட்டார்களை வைத்து உறிஞ்சாமல் தானாகவே கோவையை நோக்கி தண்ணீர் வரும் அளவில் திட்டம் செயல்படுத்தப்பட்டு இருப்பது பொதுமக்களுக்கு நன்மை அளித்து வருகிறது.

புவியீர்ப்பு விசைதத்துவத்தின் அடிப்படையில், அணைக்குள் 4 வால்வுகள்

*அமைக்கப்பட்டுள்ளன. இந்த வால்வுக்குள் தானாகவே புகும் தண்ணீர், 2 மீட்டர் சுற்றளவில் சுரங்கப்பாதைக்குள் பதிக்கப்பட்டுள்ள பகிர்மான குழாய் வழியாக 1 கிலோ மீட்டர் தூரத்துக்கு பள்ளத்தை நோக்கி ஓடி வந்து தமிழ்நாட்டு எல்லையை அடைகிறது. பின்னர் அங்கிருந்து சில கிலோ மீட்டர் தூரம் பாறைகள் வழியாக உருண்டோடி கோவை குற்றாலம் அருகே அமைக்கப்பட்டுள்ள சுத்திகரிப்பு நிலையத்தை வந்தடைகிறது.*

*குடிநீர் வடிகால் வாரிய பராமரிப்பில் உள்ள இந்த சுத்திகரிப்பு நிலையத்தில், சிறுவாணி தண்ணீரை சுத்திகரிக்க நவீன தொழில்நுட்ப கருவிகள் பயன்படுத்தப்படுகிறது.*

*குளோரின் மருந்துகள் மூலம் பல சுழற்சி முறையில் அடுக்கடுக்கான குழாய்கள் மூலம் தண்ணீர் சுத்திகரிக்கப்படுகின்றது.*

*நிமிடத்துக்கு 60 ஆயிரம் லிட்டர்*

*நிமிடத்துக்கு 60 ஆயிரம் லிட்டர் வீதம் சுத்திகரிக்கப்படுவது, மானிட்டர் கருவி மூலம் கண்காணிக்கப்படுகிறது. இதன்பிறகு ரூ.45 லட்சம் செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பாதுகாக்கப்பட்ட ராட்சதொட்டிக்குள் செலுத்தப்படுகிறது.*

*சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து 3 மெயின் குழாய்கள் மூலம் சிறுவாணி குடிநீர் நகருக்கு கொண்டு செல்லப்படுகிறது. இதில் ஒரு குழாய் 450 மில்லி மீட்டர் விட்டம் கொண்டது. இந்த பகிர்மான குழாய் தண்ணீர் பாரதிபார்க் மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு வந்தடைகிறது. அடுத்து 500 மில்லி மீட்டர் விட்டம் உள்ள பகிர்மான குழாய் மூலம் வடவள்ளி, மற்றும் கோவைப்புதூர் உள்பட பல்வேறு பகுதிளுக்கு குடிநீர் கொண்டு செல்லப்பட்டு வினியோகிக்கப்படுகிறது. 1000 மில்லி மீட்டர் விட்டம் கொண்ட 3–வது குழாய் மூலம் சாய்பாபாகாலனி மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு கொண்டு செல்லப்படுகிறது.*

*20 மேல்நிலை தொட்டிகள்*

*கோவை நகருக்கு 42 வார்டுகளில் சிறுவாணி குடிநீர் வினியோகம் செய்யப்படுகிறது. இதற்காக நகரின் பல பகுதிகளில் 20 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் கட்டப்பட்டு குடிநீர் சப்ளை செய்யப்படுகிறது.*

*இதுதவிர சிறுவாணி குடிநீர் திட்டத்தில் 10 பேரூராட்சிகளும், 12 ஊராட்சிகளும் பயன்பெறுகின்றன. இந்த பகுதிகளுக்கு தினமும் 1 கோடியே 50 லட்சம் லிட்டர் குடிநீர் வினியோகம் செய்யப்படுகிறது.*

*மொத்தமாக கணக்கிட்டால் தினமும் 8 கோடியே 75 லட்சம் லிட்டர் தண்ணீர் வினியோகிக்கப்படுகிறது.*

## மரம் வளர்ப்பு குறித்த சுற்றுச்சூழல் பாதுகாப்பு கருத்தரங்கம்

*கோவை,ஜூலை.27–*

*ஓசை சுற்றுச்சூழல் அமைப்பு சார்பில், ‘சூழல் சந்திப்பு’ என்ற கருத்தரங்க நிகழ்ச்சி கோவையில் நேற்று நடைபெற்றது. ‘பல்லுயிர் பரவலில் கோவில் மரங்கள்’ என்ற தலைப்பில் கோவில் மரங்கள் ஆய்வாளர் மா.குணசேகரன் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–*

*தமிழ் பாரம்பரியத்தின் ஒரு பகுதி கோவில்கள். இதில் ஸ்தலவிருட்சம் என்பது இடத்தையும், மரத்தையும் குறிப்பதாகும். பண்டைய தமிழர்களின் முக்கிய நிகழ்வுகள் கோவில்களில் நடைபெற்றுள்ளன. கோவில்களில் ஸ்தலவிருட்சமாக வில்வம், வன்னிமரங்கள் உள்ளன. இந்த மரங்களின் இலைகள், பூஜைக்கு பயன்படுத்தப்படுகிறது. மேலும் மருத்துவ குணங்கள் உள்ளன. இதுமட்டுமின்றி தென்னை, அசோகம், சந்தன மரங்கள் உள்பட பல்வேறு மரங்கள் கோவில்களில் வளர்க்கப்படுவது சிறப்பானதாக உள்ளது. ஆந்தை, மயில்கள், பட்டாம்பூச்சிகள், வவ்வால்கள், குரங்குகள் உள்பட*

பறவைகள், விலங்குகளுக்கு கோவில்களில் வளர்க்கப்படும் மரங்கள், செடி,கொடிகள் உதவுகின்றன. எனவே மரங்களை வளர்ப்பதில் கவனம் செலுத்துவோம்.
இவ்வாறு குணசேகரன் கூறினார்.
இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஓசை அமைப்பு தலைவர் காளிதாஸ், வக்கீல் நிக்கோலஸ், அவைநாயகன், கணேஷ் உள்பட பலர் செய்து இருந்தனர்.

## அடுத்த மூன்று ஆண்டுகளில் சூரிய சக்தி மூலம் 1,000 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய இலக்கு

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
அடுத்த மூன்று ஆண்டுகளில், நம் நாட்டில் சூரிய சக்தி மூலம் 1,000 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும் என மத்திய மின்துறை அமைச்சர் சுஷில்குமார் ஷிண்டே தெரிவித்தார். இதில் 500 மெகா வாட் சூரிய வெப்பத்தின் வாயிலாகவும், மற்றொரு 500 மெகா வாட் சூரிய ஒளி வாயிலாகவும் பெறப்படும் என அவர் கூறினார்.
மத்திய அரசுக்கு சொந்தமான பவர் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் மற்றும் ரூரல் எலக்ட்ரிஃபிகேஷன் கார்ப்பரேஷன் ஆகிய நிறுவனங்கள் மின் உற்பத்தி திட்டங்களுக்கு தேவையான நிதி உதவி வழங்கி வருகின்றன. ரூரல் எலக்ட்ரிஃபிகேஷன் கார்ப்பரேஷன் கிராமப்புறங்களில் அமைக்கப்படும் மின் உற்பத்தி திட்டங்களுக்கு கடன் வசதி அளித்து வருகிறது. இந்த இரண்டு நிறுவனங்களின் ஆதரவுடன் 2013–ஆம் ஆண்டுக்குள் 1,000 மெகா வாட் சூரிய மின் சக்தி உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.
மூன்று கட்டங்கள்
ஜவஹர்லால் நேரு தேசிய சூரிய சக்தி திட்டத்தின் கீழ் இந்த நிறுவனங்கள் நிதி உதவி வழங்க உள்ளன. இத்திட்டத்தின் வாயிலாக, அடுத்த 12 ஆண்டுகளில் சூரிய சக்தி மூலம் 20,000 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இப்பணி மூன்று கட்டங்களாக மேற்கொள்ளப்படும். 2013–ஆம் ஆண்டு வரை முதல் கட்டமும், 2017–ஆம் ஆண்டு வரை இரண்டாவது கட்டமும், 2022–ஆம் ஆண்டு வரை மூன்றாவது கட்டமும் செயல்படுத்தப்பட உள்ளன. தற்போது நம் நாட்டில் ஆண்டுக்கு 5 மெகா வாட்டுக்கும் குறைவான அளவில்தான் சூரிய மின்சக்தி உற்பத்தி செய்யப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.
ஐந்தாண்டு திட்டங்கள்
பத்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2002–2007) அனைத்து திட்டங்கள் வாயிலாக கூடுதலாக 42,000 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. ஆனால் இதில் 50 சதவீதமே (21,000 மெகா வாட்) எட்டப்பட்டது. நடப்பு ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2007–2012) நாட்டின் மொத்த மின் உற்பத்தி உற்பத்தி திறனை மேலும் 62,000 மெகா வாட் அளவிற்கு உயர்த்த இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது.
ஆனால், கூடுதலாக 55,000 மெகா வாட் அளவிற்கே மின் உற்பத்தி திறனை அதிகரிக்க முடியும் என்ற நிலை உள்ளது என மத்திய மின்சார அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. எதிர்வரும் 12–வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2012–2017) கூடுதலாக 78,700 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் வகையில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## *பச்சை தேயிலைக்கு விலை நிர்ணயிக்க கோரி கோத்தகிரியில், ஆயிரக்கணக்கான விவசாயிகள் ஆர்ப்பாட்டம்*

*கோத்தகிரி, ஜூலை.27–*
*பச்சை தேயிலைக்கு விலை நிர்ணயம் செய்யக் கோரி கோத்தகிரியில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.*
*விலை வீழ்ச்சி*
*நீலகிரி மாவட்டத்தில் முக்கிய விவசாயமாக தேயிலை விவசாயம் உள்ளது. தேயிலை சாகுபடியில் 65 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறு, குறு விவ சாயிகள் ஈடுபட்டு உள்ளனர். மேலும் தேயிலை விவசாயத்தை நம்பி லட்சக்கணக்கான தொழி லாளர்களும் உள்ளனர். கடந்த 3 மாதங்களாக பச்சை தேயிலை கடும் விலை வீழ்ச்சி ஏற்பட்டது. இதனால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். மகசூல் அதிகரிப்பு காரணமாக பச்சை தேயிலையை பல தொழிற் சாலைகள் வாங்க மறுத்தன. இதனால் தேயிலையை விவசாயிகள் சாலையில் கொட்டும் நிலைக்கு தள்ளப் பட்டனர்.*
*ஆர்ப்பாட்டம்*
*விவசாய இடுபொருட் களின் விலை உயர்வு, தொழி லாளர் பற்றாக்குறை கூலி உயர்வு ஆகியவற்றால், விவ சாயிகள் பாதிக்கப்பட்டு உள் ளனர். எனவே பச்சை தேயி லைக்கு ரூ.25 நிர்ணயம் செய்ய வேண்டும் என்று கோரிக்கை எழுந்தது. இது தொடர்பாக மத்திய–மாநில அரசுகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாய சங்கங் களின் சார்பில் கோத்தகிரி யில் ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது.*
*இதன்படி நேற்று மதியம் கோத்தகிரி மார்க்கெட் திடலில் விவசாய சங்கங் களின் சார்பில் ஆர்ப்பாட் டம் நடைபெற்றது. இதற்காக நேற்று காலை முதலே மார்க்கெட் திடலுக்கு கிராமப்பகுதிகளில் இருந்து விவசாயிகள் வரத்தொடங் கினார்கள். சரியாக மதியம் 1 மணி அளவில் ஆர்ப்பாட் டம் நடந்தது.*
*இதற்கு தேயிலை விவசாயிகள் சங்க தலைவர் பெள்ளி தலைமை தாங்கினார்.*
*அ.தி.மு.க. மாவட்ட செயலாளர் செல்வராஜ், விவசாய சங்க தலைவர்கள் தும்பூர் ஐபோஜன், கவுரி வரதராஜன், ராஜ் பெள்ளி, காங்கிரஸ் பிரமுகர் ஜே.பி.சுப்பிரமணியன், காத்துக் குளி ஆலன், கண்ணம்மாள், சுண்டட்டி மணி, ரத்தினம் ஆகியோர் முன்னிலை வகித் தனர்.*
*ஆயிரக்கணக்கானவர்கள்*
*ஆர்ப்பாட்டத்தின் போது விவசாய சங்க தலைவர்கள் போராட்டத்தின் நோக்கம் குறித்து விளக்கி பேசினார்கள். தேயிலைக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று கோஷங்கள் எழுப்பப்பட்டன. இதில் ஆயிரத்துக்கும் மேற் பட்ட ஆண், பெண் விவசாயி கள் கலந்து கொண்டனர். இதனையொட்டி அந்த பகுதியில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது.*
*ஆர்ப்பாட்ட முடிவில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.*
*கடந்த 3 மாத காலமாக பச்சை தேயிலைக்கு கடுமையான விலை வீழ்ச்சி நிலவி வருகிறது. தேயிலை வாரியம் அறிவித்த சராசரி விலை கிடைக்கவில்லை. ரூ.5 முதல் ரூ.6 வரை வித்தியாசம் உள்ளது. எனவே தேயிலை வாரியம் உடனடியாக தலையிட்டு விலை உயர்வை பெற்றுத்தர வேண்டும்.*
*விலை பகிர்வு சட்டம்*
*கூலி உயர்வு, விலைவாசி உயர்வு, இடுபொருட்களின் விலை உயர்வு போன்றவற்றின் காரணமாக பச்சை தேயிலைக்கு இடைக் கால நிவாரணமாக ரூ.5 மானியம் வழங்க வேண்டும்.*
*மத்திய அரசின் 65:35 என்ற விலை பகிர்வு திட்டத்தை அமல்படுத்திட தேயிலை*

*வாரியம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிகாரிகளின் அலட்சிய போக்கு காரணமாக விலை பகிர்வு சட்டம் இயற்றப் பட்டும், இன்று வரை அது அமல்படுத்தப்பட வில்லை.*
*ரூ.25 நிர்ணயிக்க வேண்டும்*
*தேயிலை தொழிற்சாலை களில் பச்சை தேயிலை ஏ, பி, சி, என தரம் பிரித்து விவசாயி களை ஏமாற்றி வருவதை தடுக்க வேண்டும். தேயிலை விவசாயிகளுக்கு கல்வி உதவி தொகை, கவாத்து செய்ய கடன் உதவி போன்ற வற்றை வழங்க வேண்டும். பச்சை தேயிலைக்கு குறைந்தபட்ச விலையாக ரூ.25 நிர்ணயம் செய்ய வேண்டும்.*
*மத்திய– மாநில அரசுகள் இதற்கான நடவடிக்கை எடுக்க தவறும் பட்சம் எதிர் காலங்களில் உண்ணாவிரதம், சாலை மறியல் உள்பட பல்வேறு போராட்டங்களில் ஈடுபடுவது என்பது போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.*

## கொலக்கம்பை பகுதியில் பச்சை தேயிலை மகசூல் குறைந்தது

*கொலக்கம்பை, ஜூலை.27–*
*கொலக்கம்பை பகுதியில் பச்சை தேயிலை மகசூல் குறைந்துள்ளது.*
*விலை வீழ்ச்சி*
*நீலகிரி மாவட்டத்தில் பணப்பயிராக விளங்கி வருவது தேயிலை பயிர். இதற்கு கடந்த சில ஆண்டு களுக்கு முன்பு கடுமையான விலை வீழ்ச்சி ஏற்பட்டது. இதனால் மாவட்டத்தில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது.*
*இதனை தொடர்ந்து தேயிலை வாரியம் எடுத்த நடவடிக்கையால் பச்சை தேயிலைக்கு படிப்படியாக விலை உயர்ந்து வந்தது. இந்த நிலையில் கடந்த சில மாதங்களாக பச்சைதேயிலை மகசூல் அதிகரிப்பு காரணமாக விலை சரிந்து வந்தது. பச்சை தேயிலை ஒரு கிலோவுக்கு ரூ. 4 மட்டுமே கிடைத்தது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்து வந்தனர்.*
*மகசூல் அதிகரிப்பினால் ஒரு சில தேயிலை தொழிற் சாலைகள் பச்சை தேயிலையை வாங்க மறுத்தன. இதனால் விவசாயிகள் தேயிலைகளை ரோட்டில் கொட்டி வந்தனர்.*
*மகசூல் குறைந்தது*
*இந்த நிலையில் கடந்த சில நாட்களாக கொலக்கம்பை, சேலாஸ், அறையட்டி, அதிகரட்டி உள்ளிட்ட பகுதிகளில் சாரல் மழை பெய்து வருகிறது. மேலும் சூறை காற்றும் வீசுகிறது.*
*இதன் காரணமாக பச்சை தேயிலை மகசூல் குறைவ டைந்து உள்ளது. இதனால் பச்சைதேயிலைக்கு தற்போது ரூ.10 முதல் ரூ.12 வரை கிடைக்கிறது. இது விவசாயி களிடையே நிம்மதியை ஏற்படுத்தி உள்ளது. ஆனாலும் மகசூல் அதிகமாக உள்ள நேரத்தில் விலை கிடைக்கவில்லை. மகசூல் குறைவான நேரத்தில் விலை கிடைக்கிறது என்று கொலக்கம்பை பகுதி விவசாயிகள் புலம்பவும் செய்கிறார்கள்.*
*தொடர்ந்து மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் மழை மற்றும் மேக மூட்டத்தினால் தேயிலை மகசூல் பாதிக்கப் பட்டுள்ளது.*